செ.வெ.எண்: 32 நாள்: 14.08.2021

## பத்திரிக்கைச் செய்தி

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் உரங்கள், பூச்சிக்கொல்லிகளின் தரம் குறித்த ஆய்வு பற்றி மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் தரத்தை ஆய்வு மேற்கொள்வது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது.

நாகப்பட்டினம் மாவட்டதில் செயல்பட்டு வரும் பூச்சிக்கொல்லி மருந்தாய்வகத்தில் பூச்சிக்கொல்லிகள் தர ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கின் அடிப்படையில், வட்டார அளவிலான பூச்சிக்கொல்லி ஆய்வாளர்கள் மூலம் விற்பனைக் கடைகளில் இருந்து மாதிரிகளை சேகரித்து கடலூர் ஆய்வக குறியீடு மையத்திற்கு அனுப்பப்படுகிறது. அங்கு குறியீடு வழங்கப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பூச்சிக் கொல்லி ஆய்வகத்திற்கு தர ஆய்வுக்காக அனுப்பப்படுகிறது. ஆய்வகத்தில் தரம்குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் முடிவுகள், கடலூர் குறியீடு மையத்திற்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இவ்வாறு மேற்கொள்ளப்படும் ஆய்வில் தரமற்ற பூச்சிக்கொல்லிகளின் உற்பத்தியாளர்கள், வினியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் மீது துறை மற்றும் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறாக ஆய்வகங்களில் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் தரத்தை ஆய்வு செய்தும், விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டும் தரமான உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மூலம் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**